www.tamilarangam.net

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னண
EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRO

16-1-1988

__ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி__

அன்பிற்கினிய தோழர்: மனோகரன் அவர்கட்கு,

புரட்சிகர வணக்கங்கள்.

நாட்டில் நிலவும் பொதுவான அரசியல் நிலைமைகளை ஓரளவு-நிகழ்ச்சிகள் வாரியாக நீங்கள் வெவ்வேறு மூலங்கள் வாயிலாக அறிந்து இருப்பீர்கள். அவற்றை இங்கு விரிவாக விபரிக்கவில்லை எனினும், அடிப்படையான சில விடயங்களை அடையாளங்காட்டுவதுவும், அவை தொடர்பாக நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகளையும் எதிர்வரும் அண்மைக்காலத்தில் உங்கள் முன்னாள் உள்ள உடனடிக்-கடமைகளையும் சுட்டிக்காட்டுவதும் ஸ்தாபனத்தின் கடமை என்ற அடிப்படையிலேயே இக்கடிதம் உங்களிற்கு வரையப்படுகிறது.

வெளிநாடுகளிலும், தமிழ்நாட்டிலும், உள்நாட்டிலும் உள்ள LTTE ஆதரவுசக்திகள் இந்தியப்படைகளிற்கும் புலிகளிற்குமிடையில் ஏற்பட்ட யுத்தத்தை தொடர்ந்து இந்திய எதிர்ப்பு மற்றும் பிரச்சாரங்களை தூக்கி நிறுத்தியுள்ளன. இவ்விடயத்தில் சில வினாக்களையும் அவற்றிற்-கான விடைகளையும் நாம் இனங்காண்பது அவசியமாகும்:-

அ) தாங்கமுடியாத இழப்புகள் பலவற்றைத் தாங்கிக்கொண்டு மக்களின் தொடர்ந்து வழங்கிய ஆதரவோடும், தன்னம்-பிக்கையோடும் முன்னேறிக்கொண்டிருந்த ஈழவிடுதலைப்-போராட்டத்தை சீரழித்து குட்டிச்சுவராக்கி நாசமாக்-கியவர்கள் யார்?

ஆ) இந்தியாவின் உணவுப் பொட்டலங்களிற்காக எமது மக்கள் அண்ணாந்து பார்த்திருக்க வேண்டிய கட்டாய சூழ்நிலையை உருவாக்கியவர்கள் யார்?



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

இ) தமிழ்நாட்டு அரசியல்வாதிகளிடம் மட்டுமல்லாது தமிழ்நாட்டு பொலிஸ்காரர்களிடமும் கொண்டுபோய் எமது போராட்டத்தை அடகு வைத்தவர்கள் யார்?

www.tamilarangam.net

ஈ) LTTE ஆனது யாருடைய பணத்தினால் "பெரிய இயக்கமாகவும், பலமுள்ள இயக்கமாகவும்" மாறியது?

உ) இந்தியப்படைகள் இலங்கைக்குள் புகுந்த நேரத்தில் ஒரு பக்கம் எதிர்ப்பு பிரச்சார நாடகத்தை நடத்திக்கொண்டு மறுபக்கம் இந்தியாவின் சொகுசுகளை அனுபவித்துக்கொண்டும் இந்தியப்படையின் பல்வேறுமட்ட அதிகாரிகளையும் வீடுவீடாக வரவழைத்து விருந்துபசாரம் நடத்தியவர்கள் யார்?

ஊ) விடயங்களை ஆழமாக நோக்கினால் இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டு ஆறுமாத காலமாகியும் :-

1) இலங்கைக்குள் வந்த இந்தியப்படைகள் மீண்டும் இந்தியாவுக்கு அனுப்பப்படுவதற்கான நேர்மையான அரசியல் எமது நாட்டிலும் சரி, இந்தியாவிலும் சரி? வெளிநாடுகளிலும் சரி உருவாக முடியாமல் இந்தியப் படைகள் மேலும் பல மடங்கு குவிக்கப்படுவதற்கும் தொடர்ந்து இருந்துகொண்டு இருப்பதற்குமான சூழ்நிலைகளை ஏற்படுத்திக்கொடுத்துக்கொண்டு இருப்பவர்கள் யார்?

2) வீடிழந்து வாழ்விழந்து போய் அகதிகளாகவும், அனாதைகளாகவும் நிற்கும் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் புனர்வாழ்வளிக்கப்படுவதற்கும், அழிந்துபோய் கிடக்கும் எமது தேசம் புனரமைக்கப்படுவதற்கும் தடையாக இருப்பவர்கள் யார்?

3) ஸ்ரீலங்கா அரசாங்கம் பேச்சு வார்த்தைகளையும், ஒப்பந்தத்தையும் தனக்கு சாதகமான வகையில் தந்திரமாக விளக்கம் கொடுப்பதற்கும் அதிகாரங்களும், உத்தரவாதங்களும் அற்ற மாகாணசபை அமைப்பை ஐக்கிய தேசியக்கட்சி (UNP) அரசாங்கம் சிரமம் ஏதுமின்றி சட்டமாக்குவதற்கும், காரணமேதுமின்றி ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் இன்னும் சிறைகளில் அநாவசியமாக ஸ்ரீலங்கா அரசினால் வாட்டப்படுவதற்கும் காரணமாய் இருப்பவர்கள் யார்? இவற்றுக்கெல்லாம் எதிராக ஈழத்து மக்கள் மத்தியிலிருந்து ஓர் ஐக்கியப்பட்ட போராட்டம் உருவாக முடியாமலும் அதற்கு சாதகமான அபிப்பிராயத்தை உலகளாவிய வகையில் திரட்ட முடியாமலும், சிறீலங்கா அரசு மீது ஒரு நெருக்கடியை உருவாக்க முடியாமலும் இருப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டிருப்பவர்கள் யார்?

எ) LTTE யினால் 1400-க்கு மேற்பட்ட போராளிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பல ஆயிரக்கணக்கானோர் மிகக்கொடூரமான, காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைகளிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு TV வைத்திருந்தால் 5000 ரூபாய், ஒரு மோட்டார்சைக்கிள் வைத்திருந்தால் 10,000 ரூபாய், ஒரு கார் வைத்திருந்தால் 25000 ரூபாய், [illegible] வர்த்தகம் செய்பவர்களிடம் போய் எவ்வளவு தொகையை கேட்கிறார்களோ அவ்வளவு கொடுத்தேயாகவேண்டும், அதற்கு வரையறையே இல்லை என LTTE மக்களிடமிருந்து கட்டாய வசூல்கள் ஆயுத முனையில் தொடர்-

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

...3/-

ஊ. ஐக்கிய முன்னணி வேலைத்திட்டங்கள்,

www.tamilarangam.net

எ. புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைத்திட்டம்,

ஏ. வெளிநாட்டு மற்றும் நட்பு சக்திகளுடனான உறவுகள் தொடர்பான திட்டங்கள்,

ஐ. ஏனையவை.

5. மாநாட்டில் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான நகல் அறிக்கைகளை தயாரிப்பதற்கான வேலைத் திட்டத்தினை மத்திய கமிட்டியானது குறிப்பிட்ட தோழர்களிடம் பகிர்ந்தளித்துள்ளது. எனினும் பரவலாக தோழர்களின் சொந்தக் கருத்துக்கள் அபிப்பிராயங்கள் ஆலோசனைகள், விமர்சனங்கள் திரட்டப்பட வேண்டும் எனவும் மத்திய கமிட்டி கருதுகின்றது. அந்த வகையில் தோழர்கள் ஒவ்வொருவரும் தத்தம் கருத்துக்களை தெளிவாக எழுதி எதிர்வரும் 1988களுள் தமது தொடர்பில் உள்ள மத்திய கமிட்டி உறுப்பினரிடமோ அல்லது இந்த சுற்றறிக்கை யாரால் உங்களிடம் கையளிக்கப்படுகின்றதோ அவரிடமும் ஒப்படைக்கவும்.

அதே வேளை, ஸ்தாபனத்தின் அனைத்துத் தோழர்களும் மாநாட்டில் பங்கு பற்றுதல் சாத்தியமில்லை என்பதனை தோழர்கள் புரிந்து கொள்ள முடியும். எனவே மாநாட்டின் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்ட தோழர்களே மாநாட்டில் பங்கு பற்றும் [illegible] தோழர்களின் கருத்துக்களை வெளிப்படுத்தல் வேண்டும். அதனையும் குறிப்பிட்ட திகதிக்குள் அனுப்பி வைக்கவும்.

மாநாடு பெரும்பாலும் மூன்று நாட்களே நடைபெறும். எனவே மாநாட்டில் பங்குபற்றும் தோழர்கள் அனைவருக்கும் வாய்ப்பளிக்கும் நோக்குடன் ஒவ்வொரு தோழருக்குமாக கருத்துக்கூறும் நேரம் வரையறுக்கப்பட்டிருக்கும். எனவே மாநாடு பரந்துபட்ட தோழர்களின் கருத்துக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு தோழர்கள் ஒவ்வொருவரும் முன் கூட்டிய நகல் அறிக்கைத் தயாரிப்பில் மிகுந்த அக்கறையுடன் தங்கள் பங்களிப்புக்களைத் தவறாது செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

"எமது உழைப்பு அனைத்தும் உழைக்கும் மக்களின் வெற்றிக்காகவே!

இறுதி வெற்றி உழைக்கும் மக்களுக்கே

ஓங்குக புரட்சி.

இங்ஙனம்,

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்